**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

**OS 3-2020**

**DW-1**

**பெயர் :** சதிஷ்குமார்

**த/பெ :** கருப்பசாமி

**தேதி :** 05.03.2024

**<u>சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வள்ளியம்மாள் மற்றும் சாந்தியின் தகப்பனார்கள் சகோதரர்கள் என்றால் சரிதான். இரண்டு முதல் நான்கு பிரதிவாதிகள் எனக்கு சகோதரர் முறை. வாதிகள் கோரியுள்ள தடம் எந்த காலையில் ஆரம்பித்து எந்த காலையில் முடிகிறது என்று எனக்கு தெரியுமா என்றால் 90ல் இருந்து 91 காலை வரை கோரியுள்ளார்கள். மேற்படி காலைகளுக்கு உண்டான புலவரைபடத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. எங்களுக்கு ரீ.ச. 90/1லும், ரீ.ச. 91/1, 91/2, 91/3 மற்றும் 91/4 காலைகளில் பூமி உள்ளது. அவ்வாறு எங்களுக்கு பூமி உள்ளதை காட்டுவதற்கு எந்த ஆவணத்தையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. கடந்த 27.08.1941 தேதிய வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் ரீ.ச. 91/5 காலையில் வாதிகளுக்கு பாத்தியமுள்ளது என்று அவர்கள் கூறியுள்ளதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் வா.சா.ஆ.2 ஆவணத்தை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் ராமசாமி கவுண்டருக்கு என்னென்ன காலைகளில் எவ்வளவு பங்கு உள்ளது என்று கூற இயலுமா என்றால் அதனைப் படித்து 5 வருடம் ஆனதால் ஞாபகமில்லை. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் இவ்வழக்கில் வாதிகள் கோரியுள்ள தடம் பற்றி குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு மூலப்பத்திரமான வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்திலும் வாதிகள் கோரியுள்ள தாவா தடத்தை பற்றிய

குறிப்பு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் மூலம் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தடத்தினை நான் கம்பி வேலி போட்டு தடுத்ததாக தான் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். தாவா வண்டி தடத்தை அளந்து கொடுக்க வேண்டி வாதிகள் கொடுத்த மனுவிற்கு 2ம் பிரதிவாதி சண்முகம் ஆட்சேபித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. இவ்வழக்கில் 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். கடந்த 28.06.2018 ல் 2ம் பிரதிவாதி சண்முகம் கொடுத்த வா.சா.ஆ.8 ஆட்சேபினை என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சண்முகத்தின் கையொப்பம் எனக்கு தெரியாது. மேற்படி ஆட்சேபினை கொடுத்தது சம்மந்தமாக 2ம் பிரதிவாதி சண்முகத்தை விசாரித்தால் உண்மை விவரம் தெரியும் என்றால் சரிதான். நாங்கள் கம்பிவேலி போட்டு 10 ஆண்டுகள் இருக்கும். எங்கள் பூமியை ஒட்டி தென்புறம் புதிய பாலம் கட்டப்பட்டது என்றால் இவ்வழக்கிற்கு பின்னிட்டு தான் கட்டப்பட்டது. அந்த பாலம் கட்டும்போது எங்கள் பூமியில் கம்பிவேலி இல்லை என்றாலும், பாலம் கட்டுவதற்கு முன்பாக அரசாங்கத்தால் புறம்போக்கு இடத்தில் 4 கல்கள் நட்டப்பட்டது என்றாலும் அதைப் பற்றி எனக்கு தெரியவில்லை.

5. எந்தவொரு ஆவணத்திலும் வழக்குத் தடம் எங்களுக்கு மட்டும் பாத்தியம் என்று தனித்து எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.03.05 18:41:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.